நான் அறிவேன். பல்வேறு உறுப்பினர்களும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களும் இதிலுள்ள சிரமங்களை சொல்லியிருப்பதின் காரணமாக இதற்கு எளிமையான முறையில் அனுமதி வழங்குவது பற்றி அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. விரைவில் இதுபற்றி முடிவு எடுத்ததும், அந்த முடிவுகளை அறிவிக்கும். அந்த முடிவு வந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற இடர்பாடுகள் தவிர்க்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பனையூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கம்.

*வினா எண். 173.—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம் பனையூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பில் தற்போது எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) சங்கம் கூட்டுறவு விதிமுறைக்கு உட்பட்டு இயங்கி வருகின்றதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) பனையூர் கூட்டுறவு பால் விநியோக சங்கம் என்பது இல்லை. ஆனால் ஆருத்த்ராபட்டு கூட்டுறவு பால் விநியோகச் சங்க விவகார எல்லையில் பனையூர் கிராமம் உள்ளது. இச்சங்க நிர்வாகப் பொறுப்பில் தற்போது ஆறுபேர் உள்ளனர்.

(ஆ) ஆம்.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆருத்திராப்பட்டு கூட்டுறவு பால் வழங்கும் சங்க நிர்வாகத்தில் இப்போது ஆறு பேர்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரை இந்த நிர்வாகப் பொறுப்பில் எத்தனை பேர்கள் இருந்து வந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அத்துடன் இந்தச் சங்கம் இப்போது என்ன நிலையில் பணி புரிகின்றது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சங்கத்தின நிர்வாகக் குழு ஏழு பேர்கள் கொண்டதாகும். ஆனால் நிர்வாகத்தில் சில குறைபாடுகள் இருப்பதாகச் சொல்லி சில உறுப்பினர்கள் நிர்வாகக் குழுவிலிருந்து ராஜிநாமா செய்தார்கள். ராஜிநாமா செய்ததற்குப்பிறகு காலியான இடங்களுக்கு முறையான விண்ணப்பங்கள் பெறப்பட்டு மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்போது ஆறு பேர் கொண்ட நிர்வாகக் குழு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.